[24th September 1955

SRI K. ARANGANATHAN : நில சணிதை சம்பந்தமான புள்ளி விவரங்களை அவசரமாகத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஜில்லா அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பியதன் காரணமாக ஜில்லா அதிகாரிகள் கிராமக் கணக்குப் பிள்ளைகளை துரிதப்படுத்தியதன் பேரிலும், உடனடியாக புள்ளிவிவரங்கள் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்தியதன்பேரிலும் அந்த புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதிகமாக கூட்டுப் பட்டாக்கள் இருப்பதால் சரியான விவரம் கொடுக்க முடியவில்லை. சர்க்கார் கேட்டதற்கு ஏதோ கொடுத்துவைப்போம் என்ற முறையில் கிராமக் கணக்குப்பிள்ளைகள் புள்ளி விவரங்களைக் கொடுத்திருப்பதாக கிராமத்திலுள்ளவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். அரசாங்கத்திற்கு இப்பொழுது வந்திருக்கும் புள்ளி விவரங்களுக்குப் பதிலாக மீண்டும் ஒரு முறைபுள்ளி விவரங்கள் சேகரிப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. A. MAN'CKAVELU : கிராமத்திலே பேசிக்கொள்வது இதுமாத்திரமல்ல. இன்னும் என்னென்னவோ பேசிக்கொள்கிறார்கள். அதற்கெல்லாம் நாம் என்ன செய்வது ?

SRI M. PALANIYANDI : நில சணிதை கேள்வித்தாளில் விவரங்கள் அதிகமாக இருக்கிறதென்பது தெரியும். கனம் அங்கத்தினர் திரு. அரங்கநாதன் அவர்கள் சொன்னமாதிரி கிராமக் கணக்குப் பிள்ளைகள் புள்ளிவிவரங்களை சீக்கிரம் சீக்கிரமாக சேகரித்து அனுப்பவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தியதின்பேரில், அவர்கள் புள்ளி விவரங்களைச் சரியாக சேகரித்துக்கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஐந்தாறு கிராமங்களைப் பரிட்சார்த்தமாய் எடுத்துக்கொண்டு அங்கு மீண்டுமொரு முறை புள்ளி விவரங்களைச் சேகரித்து ஏற்கெனவே கொடுத்துள்ள புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமானவரை சரியான முறையில்தான் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன என்பது அரசாங்கத்தின் கருத்து. சில இடங்களில் பரீட்சார்த்த சோதனை கூட நடந்திருக்கிறதென்று நான் நினைக்கிறேன்.

SRI M. NARAYANA KURUP : Will the Government at least make the *full* report available for the public and for those who are interested in it, on payment of cost?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, that will be considered.

Seizure of arrack and fermented wash

9-10 a.m. * 2452 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of cases of seizure of arrack and fermented wash in the City of Madras during the year 1954;

(*b*) the number of raids conducted by the Prohibition Officers in the City during the year 1954; and

(*c*) the number of persons arrested?

THE HON. SRI B. PARAMESWARAN : (*a*) Three thousand one hundred and eighty-five cases involving 3,293 persons relating to seizure of arrack and 1,702 cases involving 1,767 persons relating to seizure of fermented wash.

(*b*) One thousand, two hundred and sixty-four.

(*c*) Nine thousand, three hundred and fifty-three persons in 9,175 cases.

24th September 1955]

Sri A. RATNAM : ஒன்பதாயிரத்தி முன்னூற்று ஐம்பத்து மூன்று பேர்கள் மேற்படி குற்றங்களுக்காக "அரெஸ்ட்" செய்யபட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அவர்களில் எத்தனை பேர் ஆண்கள், எத்தனை பேர் பெண்கள், எத்தனை பேர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : இப்பொழுது அந்த விவரம் கொடுப்பதற்கு என்னிடம் போதிய விவரம் இல்லை.

Sri A. RATNAM : இம்மாதிரி குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்களில் பெண்களே ஆண்களைவிட அதிகம் என்பது உண்மையா ?

The Hon. Sri B. PARAMESWARAN : கனம் அங்கத்தினருக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம். நான் அதைப்பற்றி இப்பொழுது பதில் கொடுப்பதற்கு என்னிடம் தகவல் இல்லை.

Sri K. ARANGANATHAN : Because arrack was not included under the definition of liquor under the Madras Prohibition Act, a case ended in acquittal in the Subdivisional Magistrate's Court, Villupuram. May I know the various steps taken by this Government to include arrack under the definition of liquor?

The Hon. Sri B. PARAMESWARAN : That question does not arise from this question.

Sri V. BALAKRISHNAN : குற்றம் செய்வதற்கு ஆண்களுக்குப் போதிய தைரியம் இல்லாததனால் ஆண்கள் பெண்களைத் தங்களுக்கு கையாட்களாக வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ?

The Hon. Sri B. PARAMESWARAN : பெண்கள் செய்யும் செய்கைகளெல்லாம் கனம் அங்கத்தினருக்கு அதிகமாகத் தெரிந்திருக்கிறது.

Special Engineering Section for Malabar

* 2453 *Q.*—Sri K. C. GOPALAN UNNI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any special Engineering Section has been created in Malabar for investigating the possibilities of minor irrigation works;

(*b*) when it was created;

(*c*) where the headquarters of the section is located; and

(*d*) the results of investigation so far made?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir. A special Engineering Section consisting of an Executive Engineer and three Supervisors has been created.

(*b*) The posts were sanctioned in G.O. Ms. No. 1331, Public (Planning and Development), dated 21st April 1955.

(*c*) At Kozhikode.

(*d*) It is now too early to give the results of the investigations.